741

741
4-54

# NEW METHOD TAMIL READER

**FOR STANDARD II**

*[Prepared according to the Elementary School Syllabus 1939]*

OFFICE ... OF BOOKS
20 DEC 1954

BY
PANDIT N. KANAKARAJA IYER,
B. O. L.



T. G. GOPAUL PILLAI
TEPPAKULAM : TRICHINOPOLY

PRICE As. 6

TB
031,6 N54
139662

# புதுமுறைத் தமிழ் வாசகம்

## இரண்டாம் வகுப்பிற்குரியது

[புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது]

ஆசிரியர் :
பண்டித, N. கனகராஜையர், B.O.L.,
முன்னைத் தமிழாசிரியர், மஹாராஜா கலாசாலை, புதுக்கோட்டை

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம் | 2/27, பிராட்வே
திருச்சிராப்பள்ளி | ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை 6 அணா

*First Edition* 1939.
*Second Edition* (*Revised*) *Nov.* 1942.
*Third Edition* (*Revised*) *Nov.* 1943.
*Reprinted* 1944, 1946, *Aug.* 1946, 1947, *Jan.* 1948, *June* 1948, *Nov.* 1948, *Feb.* 1949, *June* 1949, *Aug.* 1949, *May* 1950, *July* 1950, *June* 1951. *April* 1952.
*Fourth Edition, Revised, October* 1954.

139662
சென்னை-600 008

TB
031,62
N54

**Kabeer Printing Works, Madras (2688)**

# முகவுரை

இளங் குழந்தைகள் கற்கும் கல்வி முறை புதுமை பெறவேண்டும் என்னும் கருத்தால், சென்னை அரசாங்கத்தார் 1939-ல் வெளியிட்ட புதிய பாடத்திட்டத்தை யொட்டி, இவ்வாசக வரிசைகள் இயற்றப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் புதுமுறை புகுத்தப் பெற்றிருத்தல், அவ்வப் பாடத்தின் பின்னுள்ள பயிற்சிகளால் நன்கு விளங்கும்.

கதைப் புத்தகங்களைத் தாமே படித்துப் பழகவும், பத்திரிகைகளைப் படித்துப் பொருள் அறியவும், இலக்கண அறிவைப் பெறவும், சிறுவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்று சென்னை அரசாங்கத்தார் கருதுவதால், அம்முறைக்கு ஏற்ற பாடங்களும் இவ்வாசகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. நீதிகளை விளக்கும் பாட்டுக் களும், குழந்தைகள் மனத்தைக் கவரத்தக்க இசைப் பாட்டுக்களும், நாடக முறையில் இயன்ற பாடங்களும் போதிய அளவு இவ்வாசகங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இங்ஙனம் இயன்றுள்ள இப் **புதுமுறைத் தமிழ் வாசகங்கள்** நம் நாட்டுச் சிறுவர்களுக்கு நலந் தருவனவாகும்.

கல்வி அதிகாரிகளும், கல்விச்சாலை ஆசிரியர்களும், கல்வியபிமானிகளும் இவ்வாசகப் புத்தகங்களைத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்களாக வைத்து ஆதரித்து, என்னை இப்பணியில் ஊக்கமுறச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

**N. கனகராஜையர்**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பூக்கள் | ... | 1 |
| 2. | ஆலமரம் | ... | 3 |
| 3. | பால் | ... | 5 |
| 4. | இலைகள் | ... | 7 |
| 5. | தோட்டம் | ... | 9 |
| 6. | தச்சன் | ... | 11 |
| 7. | சுவைகள் | ... | 13 |
| 8. | நிறங்கள் | ... | 14 |
| 9. | சூரியன் | ... | 16 |
| 10. | திசைகள் | ... | 18 |
| 11. | நிலாப்பாட்டு | ... | 20 |
| 12. | தபால் கடிதம் | ... | 23 |
| 13. | நாள், வாரம், மாதம் | ... | 24 |
| 14. | குழந்தை விளையாட்டு | ... | 27 |
| 15. | ஔவையார் | ... | 28 |
| 16. | பழங்கள் | ... | 31 |
| 17. | சிங்கமும் சுண்டெலியும் | ... | 34 |
| 18. | விடுகதைகள் | ... | 37 |
| 19. | நாணயங்கள் | ... | 38 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 20. | கோகலே | ... | 41 |
| 21. | **நல்ல பழக்கம்** | ... | 43 |
| 22. | வேலியும் வரப்பும் | ... | 45 |
| 23. | நமது உடம்பு | ... | 48 |
| 24. | சுகம் பேணுதல் | ... | 51 |
| 25. | நல்ல பையன் | ... | 54 |
| 26. | மகாத்மா காந்தி | ... | 57 |
| 27. | போலீஸ் சேவகன் | ... | 60 |
| 28. | வீரத்தாய் | ... | 63 |
| 29. | ஏர் | ... | 66 |
| 30. | **நரியும் காக்கையும்** | ... | 67 |
| 31. | நரியும் திராட்சைப்பழமும் | ... | 69 |
| 32. | **உலகநீதி** | ... | 72 |
| 33. | **செல்லக்கிளியே** | ... | 73 |

# இரண்டாம் வகுப்பிற்குரியது



## 1. பூக்கள்

1. பூக்கள் அழகும் மணமும் உள்ளவை.
2. படத்தில் உள்ள மலர்களைப் பார்.
3. ஒன்று மலர்ந்த பூ ; ஒன்று மலர்கின்ற பூ.
4. இன்னொன்று மலராத பூ.
5. மலர்கின்ற பூ 'போது' எனப்படும்.
6. மலராத பூவுக்கு 'அரும்பு' என்று பெயர்.
7. அரும்பை 'மொட்டு' என்றும் சொல்லலாம்.
8. பூக்கள் பலவகை நிறமாய் இருக்கும்.
9. பூக்கள் செடி, கொடி, மரங்களில் பூக்கும்.
10. மலர்கள் யாவருக்கும் மகிழ்ச்சி ஊட்டும்.

| | | |
|---|---|---|
| நிறம் | அரும்பு | மகிழ்ச்சி |
| மலர் | மொட்டு | பலவகை |
| அழகு | பூக்கும் | உள்ளவை |
| மணம் | ஊட்டும் | இன்னொன்று |
| போது | மலர்ந்த | யாவர்க்கும் |

## பயிற்சி

1. படத்தைப் பார்த்து வாக்கியத்தை முடி :



செடியில் பூக்கும்.
அழகு உள்ளது.
மணம் உள்ளது.

2. விடை எழுது :
தாழம்பூ எங்கே பூக்கும்?
தாமரைப்பூ எங்கே பூக்கும்?
பூவரசம்பூ எங்கே பூக்கும்?

3. உண்டா, இல்லையா?
சாதிப்பூவிற்கு மணம் ——.
ஊமத்தம்பூவிற்கு மணம் ——.

## கேள்விகள்

1. உனக்கு என்னென்ன பூக்கள் தெரியும்?
2. எது 'போது' எனப்படும்?
3. எது 'மொட்டு' எனப்படும்?



## 2. ஆலமரம்

1. ஆலமரம் மரங்களில் பெரியது.
2. அதன் அடியில் அநேகர் தங்கலாம்.
3. இம்மரத்தில் விழுதுகள் தொங்குவதைப் பார்.
4. சில விழுதுகள் மரம்போலக் காணப்படும்.
5. அவைகள் கிளைகளைத் தாங்குகின்றன.
6. ஆலம்பழம் மிகவும் சிறியது.
7. பறவைகள் ஆலம்பழத்தைத் தின்னும்.
8. ஆலம்பழத்தில் சிறு விதைகள் இருக்கும்.
9. மிகவும் சிறிய ஒரு விதையிலிருந்து இவ்வளவு பெரிய மரம் வளருகின்றது.
10. ஆலம் விழுதினால் பல் துலக்கலாம்.

| | | |
|---|---|---|
| போல | இவ்வளவு | துலக்கலாம் |
| அநேகர் | விழுதுகள் | காணப்படும் |
| ஆலமரம் | தங்கலாம் | தொங்குவதை |

## பயிற்சி

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை எழுது :

ஆலமரம் மிகவும் ——.
ஆலம் விதை மிகவும் ——.
சிறிய விதையிலிருந்து பெரிய மரம் ——.
ஆலமரத்தின் —— அநேகர் தங்கலாம்.
ஆலம் விழுதுகள் கிளைகளைத் ——.
கிளைகளிலிருந்து விழுதுகள் ——.

## கேள்விகள்

1. ஆலம் பழம் எப்படி இருக்கும் ?
2. ஆலம் பழத்தின் உள்ளே என்ன இருக்கும் ?
3. ஆலம் விழுதினுல் என்ன உபயோகம் ?




# 3. பால்

1. பால் இனிமையும் சத்தும் உள்ளது.
2. பசுவின் பால் நமக்கு நல்ல உணவாகும்.
3. பசுவின் பால் குழந்தைகளை வளர்க்கும்.
4. கறந்த பாலை நுரையோடு குடிக்கலாம்.
5. பாலைக் காய்ச்சிப் பிரை ஊற்றினால் தயிராகும்.
6. தயிரைக் கடைந்தால் மோராகும்.
7. தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம்.
8. வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகும்.
9. மருந்து உண்பவர்களுக்குப் பால் அவசியம்.
10. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவை தேகத்துக்கு நலம் தருவன.

| | | |
|---|---|---|
| நுரை | சத்து | காய்ச்சி |
| பிரை | நலம் | அவசியம் |
| நெய் | ஊற்றி | உருக்கினல் |
| மோர் | தேகம் | வெண்ணெய் |

## பயிற்சி

1. படம் பார்த்துப் படி :



பால் தரும்



பால் தரும்



பால் தரும்

2. வினவும் விடையும் :

பால் என்ன நிறம் ?

பால் ——.

மோரின் நிறம் என்ன ?

—— நிறம் ——.

## கேள்விகள்

1. பாலிலிருந்து என்னென்ன கிடைக்கும் ?
2. பால் என்ன குணம் உள்ளது ?
3. வெண்ணெய் எப்படிக் கிடைக்கும் ?



## 4. இலைகள்

1. இலைகள் பச்சை நிறமானவை.
2. அவை மரத்துக்கு அழகு செய்யும்.
3. பழுத்தபின் அவை மஞ்சளாக மாறும்.
4. உலர்ந்த இலை 'சருகு' எனப்படும்.
5. சருகு கீழே உதிர்ந்து விடும்.
6. இலையில் காம்பும் நரம்பும் உண்டு.
7. இலைகள் பலவித உருவங்கள் உள்ளவை.
8. இலைகள் மூலம் மரம் காற்றை இழுத்துக் கொள்ளும்.
9. பச்சிலைகள் மருந்துக்கு உதவுகின்றன.
10. சில இலைகள் உண்கலமாகவும், சில உணவுப் பொருளாகவும் உதவுகின்றன.

| | | |
|---|---|---|
| சருகு | நரம்பு | பலவிதம் |
| காம்பு | வடிவம் | உண்கலம் |
| காற்று | பச்சிலை | பழுத்தபின் |
| மாறும் | உலர்ந்த | உணவுப்பொருள் |

## பயிற்சி

இவைகளைச் சரியானபடி சேர்த்து வாக்கியங்கள் அமைக்கவும் :

| | |
|---|---|
| பச்சிலைகள் | வட்டமானது. |
| பழுத்த இலைகள் | நீளமானது. |
| உலர்ந்த இலை | உதிர்ந்து விடும் |
| சருகு | மஞ்சளாக மாறும். |
| தாமரை இலை | சருகு எனப்படும். |
| மாவிலை | மருந்துக்கு உதவும். |

## கேள்விகள்

1. இலைகளால் மரத்துக்கு என்ன உபயோகம்?
2. இலைகள் நமக்கு எப்படி உதவுகின்றன?
3. பழுத்த இலைக்கு என்ன பெயர்?



## 5. தோட்டம்

1. இது ஒரு தோட்டம்.
2. தோட்டத்தில் கிணறு இருக்கும்.
3. கிணற்று நீரை இறைத்து, செடிகளுக்குப் பாய்ச்சுவர்.
4. ஏற்றம் நீர் இறைக்க உதவும்.
5. கத்தரி, வெண்டை, மிளகாய் முதலிய செடிகள் தோட்டத்தில் வளரும்.
6. தோட்டத்தில் பல பாத்திகள் உண்டு.
7. வாய்க்கால் வழியே பாத்திக்கு நீர் வரும்.
8. வாய்க்காலை வாட்டமாய் வெட்ட வேண்டும்.
9. செடி வளர அடிக்கடி களையெடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| களை | முதலிய | பாத்திகள் |
| வழியே | வெண்டை | வாய்க்கால் |
| கத்தரி | தோட்டம் | பாய்ச்சுவர் |

## பயிற்சி

இப்பாடத்தில் உள்ள படத்தைப் பார்த்துக் கோடுகளைப் பூர்த்தி செய் :

ஒரு தோட்டம் இருக்கிறது.

தோட்டத்தில் கிணறு ———.

கிணற்றில் ——— ஊறும்.

இருவர் நீரை ———.

நீர் ——— ஓடுகிறது.

தோட்டம் ——— வளரும்.

## கேள்விகள்

1. ஐந்து காய்கறிகளின் பெயர்களைச் சொல்லு.
2. காய்கறிகள் எங்கிருந்து கிடைக்கின்றன ?
3. ஏற்றம் எதற்கு உதவும் ?



## 6. தச்சன்

1. தச்சன் மரவேலை செய்வான்.
2. வாள்காரன் பெரிய மரத்தை அறுப்பான்.
3. தச்சன் வாச்சியால் மரம் செதுக்குவான்.
4. இழைப்புளி இழைப்பதற்கு உதவுகிறது.
5. கொட்டாப்புளி அடிக்க உதவுகிறது.
6. உத்திரம், தூண், சட்டம், விட்டம் முதலியவற்றைத் தச்சன் செய்வான்.
7. வீடுகளுக்குரிய நிலை, கதவு முதலியவைகளைத் தச்சன் செய்கிருன்.
8. நாற்காலி, முக்காலி, மேஜை, அலமாரி என்பவை தச்சன் செய்யும் பொருள்கள்.

2688—2

| | | |
|---|---|---|
| நிலை | சட்டம் | நாற்காலி |
| தூண் | விட்டம் | செய்வான் |
| கதவு | அலமாரி | இழைப்புளி |
| மேஜை | முக்காலி | வாள்காரன் |
| வாச்சி | உத்திரம் | செதுக்குவான் |
| தச்சன் | மரவேலை | கொட்டாப்புளி |

## பயிற்சி

மாற்றி வாசி :

**மாதிரி 1 :** தச்சன் மரவேலை செய்வான்.
மரவேலை செய்கிறவன் தச்சன்.

(1) வாள்காரன் மரத்தை அறுப்பான்.

______ ______ ______

(2) கொல்லன் இரும்பு வேலை செய்வான்

______ ______ ______

**மாதிரி 2 :** வாச்சியால் மரத்தை அறுக்கலாம்.
வாச்சி மரத்தை அறுக்க உதவும்.

(1) இழைப்புளியால் மரத்தை இழைக்கலாம்.

______ ______ ______

(2) கொட்டாப்புளி அடிக்க உதவும்.

______ ______ ______

## கேள்விகள்

1. யாருக்குத் தச்சன் என்று பெயர் ?
2. வாள்காரன் என்று யாருக்குப் பெயர் ?
3. தச்சன் செய்யும் பொருள்கள் யாவை ?

# 7. சுவைகள்

1. நாம் நமது நாவினுல் சுவை பார்க்கிறோம்.
2. சுவையை உருசி என்றும் சொல்லலாம்.
3. கரும்பு தித்திக்கும்.
4. பாகற்காய் கசக்கும்.
5. எலுமிச்சம்பழம் புளிக்கும்.
6. மிளகாய் காரமாய் இருக்கும்.
7. கடல் நீர் உவர்க்கும்.
8. கடுக்காய் துவர்க்கும்.
9. இப்பொழுது, நாம் ஆறு விதமான சுவைகள் சொன்னோம் அல்லவா?
10. அவை தித்திப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பவை.
11. இவைகளுக்கு அறு சுவை என்று பெயர்.

| | | |
|---|---|---|
| சுவை | அறுசுவை | தித்திக்கும் |
| உருசி | கசக்கும் | துவர்க்கும் |
| கடல் | புளிக்கும் | உவர்க்கும் |
| கரும்பு | காரமாய் | பாகற்காய் |
| நாவினுல் | கடுக்காய் | எலுமிச்சம்பழம் |

### பயிற்சி

1. கரும்பு தின்னப் பிரியமாய் இருக்கிறது; ஏன்?

______ ______ ______

2. மாங்காய் தின்றால் பல் கூசுகிறது; ஏன்?

______ ______ ______

3. இவை எப்படி இருக்கும்?
மிளகாய் ———, ———.
உப்பு ———, ———.
பாக்கு ———, ———.
வேப்பிலை ———, ———.

**கேள்விகள்**

1. சுவைகள் எத்தனை வகைப்படும்? என்னென்ன?
2. தித்திக்கும் பொருள்கள் இரண்டு சொல்லு.
3. பால், மோர், தேன்—இவற்றின் சுவை என்ன?

## 8. நிறங்கள்

1. பொருள்களுக்கு நிறம் உண்டு.
2. பாலின் நிறம் வெள்ளை.
3. இரத்தத்தின் நிறம் சிவப்பு.
4. காகம் கறுப்பு நிறம் உடையது.
5. வெற்றிலையின் நிறம் பச்சை.
6. எலுமிச்சம்பழத்தின் நிறம் மஞ்சள்.
7. இப்பொழுது, நாம் சொன்ன நிறங்கள் எவை? அவை வெள்ளை, சிவப்பு, கறுப்பு, பச்சை, மஞ்சள் என்பவை அல்லவா?
8. இந்த ஐந்து நிறங்களும் **பஞ்சவர்ணம்** எனப்படும்.
9. மழை காலத்தில் ஆகாயத்தில் ஒரு பெரிய வில் போன்ற உருவம் தோன்றும்.
10. அதற்கு வானவில் என்று பெயர்.

11. அந்த வில்லில் ஏழு நிறங்கள் உண்டு.
12. அந்த நிறங்கள் சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, வெண்மை கலந்த நீலம், நீலம், ஊதா என்பனவாம்.

| | | |
|---|---|---|
| நீலம் | வர்ணம் | தோன்றும் |
| ஊதா | கலந்த | மழைகாலம் |
| கறுப்பு | இரத்தம் | ஆகாயத்தில் |
| ஆரஞ்சு | வானவில் | இப்பொழுது |
| சிவப்பு | வெற்றிலே | பஞ்சவர்ணம் |

### பயிற்சி

கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகள் எழுது:

| பொருள் | நிறங்கள் |
|---|---|
| சுண்ணும்பு | ——— |
| இரும்பு | ——— |
| ——— | சிவப்பு |
| ——— | பச்சை |
| ——— | ஊதா |
| வைக்கோல் | ——— |
| ஆகாயம் | ——— |

### கேள்விகள்

1. வானவில் எப்போது தோன்றும்?
2. பஞ்சவர்ணங்கள் எவை?
3. நாய், மாடு, குதிரை—இவைகளின் நிறங்களேச் சொல்லு.




# 9. சூரியன்

1. சூரியன் ஆகாயத்தில் தோன்றும் ஒரு நெருப்பு உருண்டை. அது நமக்கு வெளிச்சத்தையும் வெப்பத்தையும் தருகிறது.

2. சூரியன் தோன்ருவிட்டால் எங்கும் இருட்டாய் இருக்கும் ; வெப்பமே இராது ; மழை பெய்யாது.

3. சூரிய வெளிச்சம், வெப்பம், மழை இவைகள் இருந்தால்தான் பூமியில் புல் பூண்டுகள் முளைக்கும் ; மரஞ் செடிகள் வளரும் ; பிராணிகள் வாழும்.

4. சூரியன் பிரகாசிக்கும் காலத்துக்குப் **'பகல்'** என்றும், சூரியப் பிரகாசம் இல்லாத காலத்துக்கு 'இரவு' என்றும் பெயர். ஒரு பகலும், ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள் ஆகும்.

5. சூரியனுல் நாம் நாட்களைக் கணக்கிடுகிறோம்; திசையும் அறிகிறோம்.

| | | |
|---|---|---|
| வாழும் | திசைகள் | புல்பூண்டுகள் |
| சூரியன் | வழங்கும் | வெளிச்சம் |
| இருட்டு | சேர்ந்தது | அறிகிறோம் |
| வெப்பம் | இரவு பகல் | பிரகாசிக்கும் |
| நாட்கள் | பெய்யாது | கணக்கிடுகிறோம் |

## பயிற்சி

என்ன ஆகும் ?

| இவைகள் | சூரியன் தோன்றுவிட்டால் | சூரியன் தோன்றினால் |
|---|---|---|
| வெப்பம் | —— | —— |
| வெளிச்சம் | —— | —— |
| புல் பூண்டுகள் | —— | —— |
| மரஞ் செடிகள் | —— | —— |
| பிராணிகள் | —— | —— |

## கேள்விகள்

1. ஒரு நாள் என்பது என்ன ?
2. சூரியனைக் கொண்டு நாம் எவற்றை அறிகிறோம் ?




## 10. திசைகள்

1. சூரியன் உதிக்கும் திசை **கிழக்கு**; மறையும் திசை **மேற்கு**. கிழக்குத் திசையைப் பார்த்து நிற்பவனுக்கு வலக்கைப் புறம் **தெற்கு**; இடக்கைப் புறம் **வடக்கு**.

2. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு எனத் திசைகள் நான்கு.

3. சூரியன் காலையில் உதிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக மேலே சென்று, நடுப்பகலில் உச்சிக்கு வரும். பிறகு சிறிது சிறிதாகச் சாய்ந்து, மாலையில் மறைந்துவிடும்.

4. காலையில் சூரியன் தோன்றுதல் **உதயம்** என்றும், மாலையில் சூரியன் மறைதல் **அஸ்தமனம்** என்றும் சொல்லப்படும்.

| | | |
|---|---|---|
| புறம் | உதயம் | உதிக்கும் |
| உச்சி | சென்று | நடுப்பகல் |
| கிழக்கு | சாய்ந்து | பார்த்து |
| மேற்கு | வலக்கை | அஸ்தமனம் |
| தெற்கு | இடக்கை | கொஞ்சமாக |
| வடக்கு | மறையும் | சிறிது சிறிதாக |

### பயிற்சி

சூரியன் } எப்பொழுது தோன்றுகிறது? ——————.
எப்பொழுது மறைகிறது? ——————.

சூரியன் எங்கே தெரிகிறது?

| | |
|---|---|
| காலையில் | — |
| நடுப்பகலில் | — |
| மாலையில் | — |

### கேள்விகள்

1. நான்கு திசைகள் எவை?
2. அஸ்தமனம் என்றால் என்ன?
3. உதயம் என்றால் என்ன?



# 11. நிலாப்பாட்டு

1. வட்ட வடிவாயிருக்கும்
வெண்ணிலாவே—நீ
வாய்திறந்து பேசுவாயோ
வெண்ணிலாவே.

2. ஆகாயத்தில் ஓடுகின்ற
வெண்ணிலாவே—நீ
அசைந்தசைந்து போவதென்ன
வெண்ணிலாவே.

3. சுந்தரமாய்த் தோன்றுகின்ற
வெண்ணிலாவே—நீ
சுருங்குவதேன் வளருவதேன்
வெண்ணிலாவே.

4. மேகத்தில் மறைந்துவரும்
வெண்ணிலாவே—நீ
விளையாட வருவாயோ
வெண்ணிலாவே.

5. ஓங்கியே பயிர்வளர
வெண்ணிலாவே—நீ
உதவிதான் புரிவதுண்டோ
வெண்ணிலாவே.

6. குளிர்ந்தநல்ல நிலவொளியை
வெண்ணிலாவே—நீ
கொட்டுகிறாய் மண்முழுதும்
வெண்ணிலாவே.

| | | |
|---|---|---|
| ஒளி | ஓங்கியே | மண்முழுதும் |
| நிலவு | விளையாட | வெண்ணிலா |
| உதவி | மேகத்தில் | பேசுவாயோ |
| புரிவது | சுந்தரமாய் | கொட்டுகிறாய் |
| குளிர்ந்த | சுருங்குவது | அசைந்தசைந்து |

## பயிற்சி

சரியாக வரிசை சேர்த்துப் படி :

| | |
|---|---|
| வெண்ணிலா | பகலில் காணப்படும். |
| வெயில் | குளிர்ச்சியானது. |
| சூரியன் | இரவில் காணப்படும். |
| சந்திரன் | உஷ்ணமானது. |

## கேள்விகள்

1. சந்திரனுடைய வடிவம் என்ன ?
2. நீ சந்திரனைத் தினமும் பார்க்கிறாயா ?
3. சந்திரன் தினமும் ஒரேமாதிரி தெரிகிறதா ?


POST OFFICE
STAMPS
MONEY ORDER
LETTERS
R.M.S

# 12. தபால் கடிதம்

1. இது ஒரு தபால் ஆபீஸ். இங்கே கார்டு, கவர் முதலியன கிடைக்கும்.

2. கந்தன் தபால் ஆபீஸில் ஒரு கார்டு வாங்குகிறன். கார்டின் விலை முக்கால் அணு.

3. கந்தன் அண்ணனுக்குக் கார்டு எழுதினன். அவன் அதைத் தபால் பெட்டியில் போடுகிறன்.

4. தபால் சேவகன் பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுத்துச் செல்கிறன்.

5. தபால் ஆபீஸில் கடிதங்களின்மேல் முத்திரை அடிப்பார்கள்; கடிதங்களைப் பைகளில் கட்டித் தபால் வண்டியில் அப்பைகளை ஏற்றிச் செல்வார்கள்.

6. தபால் பைகள் ரயில் வண்டியில் ஏற்றி அனுப்பப்படுகின்றன.

7. ரயில் வந்து ஸ்டேஷனில் நிற்கிறது. தபால் பைகள் இறக்கப்படுகின்றன.

8. தபால் பைகளைத் தபால் ஆபீஸுக்கு எடுத்துச் சென்று, கடிதங்களில் முத்திரை அடித்தபின், தபால்காரன் அவைகளை நமது வீட்டில் கொண்டு வந்து கொடுக்கிறன்.

| | | |
|---|---|---|
| விலை | முத்திரை | தபால் ஆபீஸ் |
| கவர் | சேவகன் | முக்கால் அணு |
| கார்டு | ஸ்டேஷன் | இறக்கப்படுகின்றன |
| கடிதம் | கிடைக்குமிடம் | அனுப்பப்படுகின்றன |

## பயிற்சி

பின்கண்ட சொற்களைக் கீழே உள்ள கோடுகளில் சரியாக அமைத்துப் படி :

முத்திரை, கொடுக்கிருன், எடுப்பான், போடுகிருேம், தபால் வண்டி.

நாம் கார்டு, கவர்களை எழுதித் தபாற்பெட்டியில்——.

தபாற் சேவகன் அவற்றை——.

அவன் அவற்றிற்கு ——போடுவான்.

தபால்கள்——யில் அனுப்பப்படுகின்றன.

தபால்காரன் கடிதங்களைக் கொண்டுவந்து——.

## கேள்விகள்

1. உங்கள் ஊரில் தபால் ஆபீஸ் உண்டா ?
2. ஒரு கார்டும் கவரும் என்ன விலை ?

# 13. நாள், வாரம், மாதம்

1. இந்தப் பிள்ளைகள் இன்று பாடசாலைக்குப் போகவில்லை ; வீதியில் விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். ஏன்? இன்று ஞாயிற்றுக்கிழமை.

2. ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் முதல் நாள். அந்த நாளில் பாடசாலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை நடக்காது. அன்று விடுமுறை நாள் ஆகும்.

3. வாரத்திற்கு நாட்கள் ஏழு. அவை ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பன. நாட்களைக் கிழமைகள் என்றும் சொல்வது உண்டு.

4. ஏழு நாட்கள் சேர்ந்தது ஒருவாரம். நான்கு வாரங்கள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதங்கள் உடையது ஒரு வருஷம்.

5. தமிழ் மாதங்கள் சித்திரையிலிருந்து தொடங்கும். அவை சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி எனப்படும்.

இங்கிலீஷ் மாதங்கள் ஜனவரியிலிருந்து ஆரம்பம் ஆகும். அவை ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, ஜுன், ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் என்பன.

6. வருஷம் ஆரம்பம் ஆகும் நாள் வருஷப் பிறப்பு என்று சொல்லப்படும். தமிழ் வருஷப் பிறப்பு

சித்திரை மாதம் முதல் நாளிலும், இங்கிலீஷ் வருஷப் பிறப்பு ஜனவரி மாதம் முதல் நாளிலும் கொண்டாடப் படும்.

| | | |
|---|---|---|
| தமிழ் | வருஷம் | பள்ளிக்கூடம் |
| வாரம் | விடுமுறை | வருஷப்பிறப்பு |
| மாதம் | இங்கிலீஷ் | உத்தியோகசாலை |
| கிழமை | தொழிற்சாலை | கொண்டாடப்படும் |

## பயிற்சி

1. **பெயர் என்ன ?**
   பள்ளிக்கூடம் இல்லாத நாள் ——.
   வருஷத்தின் முதல் நாள் ——.
   மாதத்தின் முதல் நாள் ——.

2. **எப்போது ?**
   இங்கிலீஷ் வருஷ ஆரம்பம் ——.
   இங்கிலீஷ் வருஷ முடிவு ——
   தமிழ் வருஷ ஆரம்பம் ——.
   தமிழ் வருஷ முடிவு ——.

## கேள்விகள்

1. வாரத்தின் நாட்கள் எவை ?
2. தமிழ் மாதங்களைக் கூறு.
3. இங்கிலீஷ் மாதங்களைச் சொல்லு.
4. தமிழ் வருஷப்பிறப்பு எப்போது வருகிறது ?

# 14. குழந்தை விளையாட்டு

1. ஆடிப் பாடுவோம் தினம் ஆடிப் பாடுவோம்
ஆடிப்பாடி யோடிக்கூடி யானந்தம் கொள்வோம்.
2. துள்ளிப் பாய்குவோம் அடா துள்ளிப் பாய்குவோம்
துள்ளிக் குதித்து மெள்ளச் சிரித்துச் சோம்பல் தள்ளுவோம்.
3. கன்று போலவே இளங்கன்று போலவே
களித்து மகிழ்ந்து குதித்துத் துள்ளிக் கைகள் கொட்டுவோம்
4. சக்கரங்களே சிறு சக்கரங்களே
தக்கவாறு சுற்றியோடத் தாவி யோட்டுவோம்.
5. பந்து போடுவோம் பிள்ளைப் பந்துபோடுவோம்
பந்திபந்தி யாகநின்று பாடி யாடுவோம்.
6. கிட்டியாடுவோம் சிறு கிட்டியாடுவோம்
கிட்ட நின்றும் எட்ட நின்றும் கேடிலாமலே.
7. கிளித்தட் டாடுவோம் நல்ல கிளித்தட் டாடுவோம்
கிளியை வெளியில் தெளிய நிறுத்திக் கிளித்தட் டாடுவோம்.
8. வெளியில் ஓடுவோம் தெரு வெளியிலோடுவோம்
வெயிலு நிழலு மறந்து திரிந்து வெளியிலோடு வோம்.

| | | |
|---|---|---|
| கிட்ட | களித்து | பந்தி பந்தியாக |
| எட்ட | மகிழ்ந்து | ஆடிப்பாடுவோம் |
| தெளிய | கிளித்தட்டு | துள்ளிப் பாய்குவோம் |
| ஓட்டம் | கேடிலாமலே | கைகள் கொட்டுவோம் |
| ஆட்டம் | பிள்ளைப்பந்து | ஆனந்தம் கொள்வோம் |

2688—3



## 15. ஔவையார்

1. ஔவையார் ஒரு கிழ அம்மையார். ஔவை என்றால் கிழவி என்று அர்த்தம். ஔவையார் நிரம்பப் படித்தவர். ஆகையால், அவரை மரியாதை யாக **ஔவையார்** என்று அழைப்பார்கள்.

2. ஔவையார் ஏழைகளிடம் இரக்கம் உள்ள வர். மனிதர், கல்வியும் நல்ல நடத்தையும் உடைய வராக இருக்கவேண்டும் என்பது அவர் விருப்பம். ஆகையால், அவர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு உபதேசம் செய்தார்.

3. ஔவையாரின் அன்பையும் கல்வியையும்

கண்டு அரசர்களும் அவரை மரியாதை செய்து உபசரித்தார்கள்.

4. ஒரு நாள் ஔவையார் ஒரு காட்டுவழியாக நடந்து வந்தார். வெயில் அதிகமாய் இருந்தது. பசியும் தாகமும் அவருக்கு அதிகமாய் உண்டாயின. அப்பொழுது ஓர் உழவன் நிலத்தை உழுதுகொண்டு இருந்தான். அவன் பசியால் களைத்துத் தன்னிடம் இருந்த கூழைக் குடிக்கப் போனான்.

5. கூழ் இருந்த கலயத்தை உழவன் எடுத்த போது, ஔவையார் அங்கே வந்தார். அவரது பசியை உழவன் அறிந்தான். "பாட்டி! இந்தக் கூழைக் குடி; அப்புறம் பேசுவோம்" என்றான். ஔவையார் அந்தக் கூழை வாங்கிக் குடித்து உழவனை வாயார வாழ்த்தினார்.

6. ஔவையார் அந்தக் கூழின் பெருமையைப் புகழ்ந்தார்; உழவனை வாழ்த்திப் பாடினார். இதனால் 'ஔவையார் கூழுக்கும் பாடுவார்' என்று கூறுவது வழக்கம். **ஆத்திசூடி, கொன்றைவேந்தன்** முதலிய நூல்கள் ஔவையார் பாடியவை.

| | | |
|---|---|---|
| பசி | இரக்கம் | ஊர்ஊராக |
| கூழ் | அப்புறம் | வாழ்த்தினர் |
| அன்பு | கல்வியும் | அரசர்களும் |
| சென்று | விருப்பம் | நடத்தையும் |
| மக்கள் | ஆத்திசூடி | மரியாதையாக |
| பெருமை | அறிந்தான் | உடையவராக |
| நிலத்தை | உபதேசம் | அழைப்பார்கள் |
| வாயார | புகழ்ந்தார் | கிழ அம்மையார் |
| களைத்து | ஆகையால் | உபசரித்தார்கள் |
| வழக்கம் | காட்டுவழி | கொன்றைவேந்தன் |
| கூறுவது | ஔவையார் | நிரம்பப் படித்தவர் |

## பயிற்சி

பின் கண்ட வார்த்தைகளைக் கீழே உள்ள வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியாக அமைத்து எழுது :

அன்பு, விருப்பம், இரக்கம், வாழ்த்தினர், மரியாதையாக.

1. பெரியோரிடத்தில் ——— நடக்கவேண்டும்.
2. குழந்தைகளுக்கு விளையாட்டில் ——— அதிகம்.
3. தாய்க்குக் குழந்தைகளிடத்தில் ——— அதிகம்.
4. பெரியோர் குழந்தையை ———.
5. ஏழைகளிடத்தில் ——— கொள்ளு.

## கேள்விகள்

1. ஔவையார் என்பவர் யார் ?
2. அவர் விருப்பம் என்ன ?
3. உழவன் ஔவையாருக்குச் செய்த உதவி என்ன?
4. ஔவையார் பாடிய நூல்கள் யாவை ?



# 16. பழங்கள்

1. பிள்ளைகளே! பழங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பழங்களில் பலவகை உண்டு. அவை பெரும்பாலும் தித்திப்பாய் இருக்கும். பழங்கள் தேகத்துக்குப் புஷ்டியையும் பலத்தையும் தரும்.

2. சில பழங்கள் ஆகாரத்துக்குத் தகாதவை. ஆகையால், தின்னத் தகுந்த பழங்கள் இன்னவையென்று தெரிந்துகொண்டு, அவைகளைத் தின்ன வேண்டும்.

3. நமது தேசத்தில் மூன்றுவிதப் பழங்கள் பெயர் பெற்றவை. அவைகளில் வாழைப்பழம் ஒன்று. வாழைப்பழம் வருஷம் முழுவதும் அகப்படும். அதன் விலை கொஞ்சந்தான்.

4. இன்னொரு பழத்துக்கு மாம்பழம் என்று பெயர். அது உடம்புக்கு மிகவும் உஷ்ணத்தைக்

கொடுக்கிறது; தேகசௌக்கியத்துக்கு ஏற்றதன்று. ஆயினும், அது மிகவும் சுவையுள்ளது. அதனுல், எல்லோரும் அதனை விரும்பி உண்கிருர்கள்.

5. மற்ருெரு பழத்துக்குப் பலாப்பழம் என்று பெயர். அது மிகவும் பெரியது. அதன் மேற்பாகம் முள்ளுமுள்ளாய் இருக்கும். அதன் உள்ளே இருக்கும் சுளைகள்தான் தின்னக்கூடியவை. அவை மிகவும் இனிப்பாய் இருக்கும். அப்பழமும் தேக சுகத்திற்கு அவ்வளவு ஏற்றதன்று.

6. மேலே சொன்ன மூன்று பழங்களுக்கும் **முப்பழம்** என்று பெயர்.

7. மாம்பழமும் பலாப்பழமும் வெயிற்காலத்தில் அகப்படும். அவைகளைத் தவிர கிச்சிலிப்பழம், திராட்சைப்பழம், மாதுளம்பழம் முதலிய வேறு பல பழங்களும் உண்டு. அவைகள் தேகத்திற்குச் சுகம் கொடுக்கக்கூடியவை.

8. ஆகாரத்திற்குப் பின் பழங்களைத் தின்பது உடலுக்கு நலம் கொடுக்கும். ஆகையால், பழம் தின்னும் பழக்கம் மிகவும் நல்லது.

| | | |
|---|---|---|
| பழக்கம் | பலாப்பழம் | புஷ்டியையும் |
| சுளைகள் | தகாதவை | மாதுளம்பழம் |
| முப்பழம் | தகுந்தவை | பெரும்பாலும் |
| மாம்பழம் | பழத்தையும் | முள்ளுமுள்ளாய் |
| அகப்படும் | சௌக்கியம் | திராட்சைப்பழம் |
| ஏற்றதன்று | கிச்சிலிப்பழம் | பெயர்பெற்றவை |

## பயிற்சி

1. சில பழங்கள் இனிப்பாய் இருக்கும்.
எவை எவை ?———— ————.

2. சில பழங்கள் இனிப்பாய் இரா.
எவை எவை ?———— ————.

3. பின்வரும் வாக்கியங்களை முடி :
நல்ல பழங்கள் தின்னத் ————.
அழுகிய பழங்கள் தின்னத் ————.
நல்ல காரியங்கள் செய்யத் ————.
கெட்ட காரியங்கள் செய்யத் ————.

## கேள்விகள்

1. முப்பழம் என்பவை எவை ?
2. நாம் எதற்காகப் பழங்களைத் தின்கிறோம் ?
3. மிகச் சுவையுள்ள பழம் எது ?




# 17. சிங்கமும் சுண்டெலியும்

1. ஒரு நாள் ஒரு சிங்கம் ஒரு மரத்தின் நிழலில் படுத்து உறங்கிக்கொண்டு இருந்தது. அப்பொழுது, அங்கு வந்த ஒரு சுண்டெலி, சிங்கம் தூங்குவதைக் கண்டது. அது தன் விளையாட்டுத்தனத்தால் சிங்கத்தின் மேல் ஏறிக் குதித்து விளையாடிற்று.

2. உடனே சிங்கம் கோபங்கொண்டு விழித்துப் பார்த்து, "அடா, அற்பப் பயலே! என்னை யாரென்று நினைத்தாய்?" என்று சொல்லிச் சுண்டெலியைக் கொல்வதற்குத் தன் காலைத் தூக்கிற்று.

3. அப்பொழுது சுண்டெலி நடுநடுங்கி "ஐயனே, நான் ஒரு சிறிய பிராணி. என்னை ஒரு

பொருளாகத் தாங்கள் மதிக்கக்கூடாது. அறியாமல் குற்றம் செய்த என்னை மன்னிக்கவேண்டும்'' என்று அது கெஞ்சிக் கேட்டது.

4. அதைக் கேட்ட சிங்கத்துக்கு மனத்தில் இரக்கம் உண்டாயிற்று. ஆகையால், அது சுண்டெலியைக் கொல்லாமல் விட்டுவிட்டது. சுண்டெலி, 'இன்று நான் எமன் கையிலிருந்து தப்பினேன்' என்று மகிழ்ச்சியுடன் ஓடித் தன் வளைக்குள் புகுந்தது.

5. சில நாட்கள் சென்ற பிறகு, காட்டில் இரை தேடப் புறப்பட்ட அச்சிங்கம், அங்கு வேடன் கட்டியிருந்த வலையில் சிக்கிக்கொண்டது. வலையிலிருந்து தப்பித்துக்கொள்ள அதனால் முடியவில்லை. ஆகையால், அது மிகுந்த கோபத்துடன் கர்ச்சித்தது.

6. அந்தக் கர்ச்சனையைக் கேட்டதும், சுண்டெலி அது உண்டான இடத்திற்கு ஓடிற்று. அங்கு ஒரு சிங்கம் வலையில் அகப்பட்டிருக்கக் கண்டது. அச்சிங்கம் முன்னே தன்னைக்கொல்லாமல் மன்னித்த சிங்கந்தான் என்பதை அது தெரிந்துகொண்டது.

7. உடனே, சுண்டெலி தன் சிறு பற்களால் வலையைக் கடிக்கத் தொடங்கிற்று. சிறிது நேரத்திற்குள் சிங்கம் இடிபோல் முழங்கி வலையைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்தது. தான் முன் காப்பாற்றிய சுண்டெலியே தன்னை விடுவித்தது என அறிந்து, அதை மெச்சித் தன் இருப்பிடம் சென்றது.

8. சுண்டெலி தனக்குச் சிங்கம் செய்த உதவியை மறக்கவில்லை பார்த்தீர்களா! அதைப் போலவே நாமும் பிறர் செய்த உதவியை மறக்கலாகாது.

| | | |
|---|---|---|
| நிழல் | கொடிய | மன்னிக்க |
| எமன் | உறங்கி | சுண்டெலி |
| கெஞ்சி | கோபம் | தப்பினேன் |
| மதிக்க | விழித்து | கொல்லாமல் |
| குற்றம் | தாங்கள் | அற்பப்பயலே |
| சிங்கம் | கர்ச்சனை | இடிபோல் முழங்கி |

### பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் பின் கண்ட வார்த்தைகளைச் சரியானபடி சேர்த்து எழுது:

வலை, வளை, இடி, கெஞ்சுவான், மன்னிப்பார்கள், குற்றம்.

எலி ——— யில் வசிக்கும்.
மீன் ——— யில் சிக்கிக்கொள்ளும்.
வானத்தில் ——— இடிக்கும்.
சிறுவர்கள் ——— செய்வார்கள்.
பெரியவர்கள் சிறுவர்களை ———.
பிச்சைக்காரன் ———.

### கேள்விகள்

1. சிங்கம் ஏன் கோபம் கொண்டது ?
2. சுண்டெலி சிங்கத்திற்குச் செய்த உதவி என்ன ?
3. இக்கதையிலிருந்து நீங்கள் அறிவது என்ன ?

# 18. விடுகதைகள்

சின்னஞ் சிறு குழந்தாய் ;
என் பெயரைச் சொல்லாய் ;
நீரும் எனக்குள்ளே ;
நிழலும் எனக்குள்ளே ;
வீடும் என்னுல் ஆகும் ;
விறகு நானே தருவேன் ;
காளை கட்ட வருவேன் ;
கன்றும் எனக்குள் அடங்கும் ; ;
தேர் விழாவும் என்னுலே ;
திரண்டபழம் என் தலைமேல்.





தலையால் குலைசாய்ப்பேன் ;
காலடியில் கன்றுண்டு ;
உண்ணக் கலந்தருவேன் ;
சூடாத வோர் பூவுண்டு ;
காலும் உமக் காவேன் ;
களிப்போடே நான் பூண்பேன் ;
பட்டா டையாய் வருவேன் ;
பழுத்த பழம் தருவேன் ;
நானும் யாரோ சொல்லாய்.

| | | |
|---|---|---|
| சூடாத | பூண்பேன் | கலியாணம் |
| திரண்ட | பட்டாடை | சின்னஞ்சிறு |
| அடங்கும் | தேர் விழா | களிப்போடு |

# 19. நாணயங்கள்

1. நாம் ஒரு பொருளைக் கடையில் வாங்க வேண்டுமானால் அதற்குரிய விலையைக் கொடுத்துப் பெறவேண்டும். அப்படிக் கொடுக்கப்படும் விலை ரூபாய், அணா, பை முதலியனவாக இருக்கின்றன. அவைகளுக்கு **நாணயங்கள்** என்று பெயர்.

2. முற்காலத்தில் ஒரு பொருளைக் கொடுத்து அதற்குப் பதிலாக மற்றொரு பொருளை மாற்றிக் கொள்ளுதல் வழக்கம் அதிகமாக இருந்தது. அதற்குப் **பண்ட மாற்றல்** என்று பெயர் வழங்கி வந்தது.

3. நாணயங்கள் பல மதிப்புடையவை. நாணயங்களின் ஒரு பக்கத்தில் அதன் மதிப்பும் செய்யப்பட்ட வருஷமும் காணப்படும்.



ஒரு ரூபாய்



அரை ரூபாய்



கால் ரூபாய்

4. இங்கே காணப்படுவன ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்கள். இவைகள் வட்ட வடிவமானவை. ஒரு ரூபாய்க்கு மதிப்புப் பதினாறு அணா; அரை ரூபாய்க்கு எட்டணா; கால் ரூபாய்க்கு நான்கணா.

5. அடியிற் காணப்படுவன இரண்டணு, ஓரணு அரையணு, காலணு, பை ஆகிய நாணயங்கள். இவற்றுள் இரண்டணுவும் அரையணுவும் சதுர வடிவமாய் இருப்பதைப் பார். ஓரணு நாணயம் வளைந்த ஓரமுள்ளதாய் இருக்கின்றது. பை என்பது சல்லி, தம்படி, காசு என்றும் வழங்கப்படும்.




இரண்டணு




ஓர் அணு




அரையணு




காலணு




தம்படி

6. ஓர் அணுவுக்கு மதிப்புப் பன்னிரண்டு பை; அரையணுவுக்கு ஆறு பை; காலணுவுக்கு மூன்று பை. இரண்டணுவுக்கு அரைக்கால் ரூபாய் என்றும் பெயர்.

7. மேலே சொன்ன நாணயங்கள் நமது இந்தியா தேசத்தில் வழங்கி வருபவை. ஆகையால், இவைகளுக்கு ‘இந்திய நாணயங்கள்’ என்று பெயர்.

| | | |
|---|---|---|
| கடை | ரூபாய் | தற்காலம் |
| அணு | சல்லி | முற்காலம் |
| கால் | தேசம் | அரைக்கால் |
| அரை | தம்படி | நாணயங்கள் |
| உரிய | மற்ருெரு | மாற்றிக்கொள் |

## பயிற்சி

I. பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமைத்து எழுது: நாணயம், அரசரின், அரசாங்கத்தார், வட்டமாய், தலை, முற்காலத்தில், தற்காலத்தில்.

II. கோடிட்ட இடங்களில் உரிய பதங்களை அமைத்து எழுது:

(1) —— கொடுத்துப் பொருள்களை ——.
(2) —— பண்டமாற்றல் வழக்கம் இருந்தது.
(3) நாணயங்களின் ஒரு பக்கத்தில்——இருக்கும்
(4) சில நாணயங்கள் —— இருக்கும்.

## கேள்விகள்

1. இந்திய நாணயம் என்ருல் என்ன?
2. நம் நாட்டில் வழங்கும் நாணயங்கள் எவை?
3. பண்டமாற்றல் என்ருல் என்ன?



## 20. கோகலே

**1.** கோகலே ஒரு சிறந்த தேச பக்தர். இவர் இந்தியா தேசத்தின் நன்மைக்காக மிகவும் உழைத்தார். இவரை யாவரும் மதித்துக் கொண்டாடினார்கள்.

**2.** இவர் மகாராஷ்டிர தேசத்திலுள்ள கோலாப்பூரில் பிறந்தார்; இளம் பருவத்திலே நன்றாகக் கல்வி கற்றார்; பதினெட்டு வயதுக்குள் பி. ஏ. பரீட்சையில் தேறினார்; பூனா நகரத்திலே உபாத்தியாயர் வேலை பார்த்தார்.

3. கோகலே மிகவும் குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டு, இருபது வருஷங்கள் மாணவர் நன்மைக்காக உழைத்தார். எந்தப் பாடத்தையும் கற்பிக்கும் வல்லமை இவருக்கு உண்டு.

4. அதன்பின் இவர் தேசத்துக்கு உழைக்க முன் வந்தார்; பெரிய கூட்டங்கள் கூட்டிப் பேசித் தேசத்தின் நன்மைக்கு உழைக்கும்படி மக்களை இவர் தூண்டினர்.

5. சிறுவர் சிறுமிகளுக்கு வேண்டிய ஆரம்பக் கல்வி தேச முழுவதும் பரவ வேண்டும் என்பது கோகலேயின் விருப்பம். அதற்காக இவர் மிகவும் உழைத்து வந்தார்.

6. இவர் தேசத்துக்காகச் செய்த நன்மைகளை எல்லோரும் அறிந்து புகழ்கிறார்கள். **கோபால கிருஷ்ண கோகலே** என்ற இப் பெரியாரின் சிலை ஒன்று சென்னப்பட்டணத்தில் இருக்கிறது.

| | | |
|---|---|---|
| சிலை | இளமை | வேண்டினர் |
| பரவ | பருவம் | பூனு நகரம் |
| சிறுமி | குறைந்த | தேசபக்தர் |
| கல்வி | கோகலே | உழைத்தார் |
| வயது | தெளிவாக | கூட்டங்கள் |
| சிறுவர் | சம்பளம் | கோலாப்பூர் |
| கற்றூர் | மாணவர் | ஆரம்பக்கல்வி |
| பரீட்சை | வல்லமை | மகாராஷ்டிரர் |
| தேறினர் | பிறந்தார் | சென்னப்பட்டணம் |

### பயிற்சி

பின் வரும் வார்த்தைகளைப் பொறுக்கிக் கீழே உள்ள வாக்கியங்களில் பொருத்தி எழுது :

தேசத்தின் நன்மைக்காக, மாணவர் நன்மைக்காக, யாவரும், மதிப்பு, இளம்பருவத்தில்.

தேச பக்தர்கள் ——— ——— உழைக்கிறார்கள்.
உபாத்தியாயர்கள் ——— ——— உழைக்கிறார்கள்.
படித்தவர்களுக்கு ——— உண்டு.
——— கல்வி கற்க வேண்டும்.
நல்லவர்களை ——— கொண்டாடுவார்கள்.

### கேள்விகள்

1. கோகலே என்ன வேலையில் இருந்தார்?
2. அவர் கல்விக்காக என்ன செய்ய முயன்றார்?
3. நம் தேசத்துக்கு அவர் என்ன நன்மை செய்தார்?

## 21. நல்ல பழக்கம்

1. காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு ;
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

2. பொய்சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா ;
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

3. சோம்பல் மிகக்கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா ;
தேம்பி அழும் குழந்தை நொண்டி—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

4. தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா ;
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

| | | |
|---|---|---|
| துணை | தேம்பி | போராடு |
| கனிவு | கும்பிடு | அமிழ்தில் |
| ஆகாது | நொண்டி | புறஞ் சொல்லல் |
| கூடாது | ஆன்றோர் | திடங்கொண்டு |
| கெடுதி | சோம்பல் | வழக்கப்படுத்திக்கொள்ளு |

## பயிற்சி

**சரியானபடி சேர்த்து வாசி :**

| | |
|---|---|
| காலையில் | நமக்குத் துணை. |
| மாலையில் | மிகக் கெடுதி. |
| தெய்வம் | தட்டாதே. |
| சோம்பல் | படி. |
| தாய் சொல்லைத் | ஆகாது. |
| புறஞ்சொல்லல் | விளையாடு. |

## கேள்விகள்

1. பாப்பா, நீ என்ன செய்வாய் ?
2. பாப்பா, நீ என்னென்ன செய்யமாட்டாய் ?



# 22. வேலியும் வரப்பும்

முருகன் என்ற உழவன் மண்வெட்டி எடுத்துக் கொண்டு வயலுக்குப் போனான். கண்ணன் என்ற அவன் மகனும் கூடவே சென்றான். கண்ணன் சிறு பிள்ளை. வயலை ஒரு விளையாடும் இடம் என்று அவன் நினைத்தான். முருகன் வயலுக்குப் பக்கத்தில் வந்ததும் வேலை செய்யப் போனான். கண்ணன் ஒரு வரப்பின்மேல் நின்றான்.

**கண்ணன் :** அப்பா, மண்ணை வெட்டி வரப்பின்மேல் போடுவது ஏன் ?

**முருகன் :** கண்ணா, வரப்பு உயரவேண்டும் ; அதற்காக மண்வெட்டிப் போடுகிறேன்.

**கண்ணன் :** அப்பா, வரப்பு ஏன் மிகவும் உயரமாக இருக்கவேண்டும் ? கொஞ்சம் உயரம் போதாதா?

**முருகன் :** குழந்தாய், வரப்பு உயரமாய் இருந்தால், நாம் பாய்ச்சுகிற தண்ணீர் வயலுக்குள் வந்து ஆழமாகத் தேங்கி நிற்கும்.

**கண்ணன் :** தண்ணீர் அதிகமாகத் தேங்கி நின்ருல் பயிர் அழுகிப் போகாதா ?

**முருகன் :** நெல்லுக்குத் தண்ணீர் அதிகமாக வேண்டும். வரப்பின் பலத்தினுல்தான் தண்ணீர் நிலத்தில் தேங்கி நிற்கும்.

**கண்ணன் :** அப்பா, வரப்பு வேண்டும் என்று தெரிந்து கொண்டேன். வரப்பின்மேல் எதற்காக வேலி கட்டுகிருர்கள் ?

**முருகன் :** வேலி கட்டாவிட்டால் பயிர் விளைந்து செழித்துள்ள காலங்களில் ஆடுமாடுகள் மேய்ந்து விடும்.

**கண்ணன் :** ஆடுமாடுகள் பயிரையா மேயும் ? புல்லைத்தானே மேயும் ?

**முருகன் :** பசும் பயிர்களை ஆடுகளும் மாடுகளும் பார்த்தால் புல்லை மறந்து ஓடிவந்து மேயும்.

**கண்ணன் :** ஆடுமாடுகள் வயல் பக்கம் வராமல் பார்த்துக்கொள்ள முடியாதா ?

**முருகன் :** நெல் முற்றியிருக்கும்போது நாம் காவல் காக்கிருேம். பச்சைப் பயிராக உள்ளபோது காப்பது இல்லை. ஆகையால் அப்பொழுது மாடு மேயாமல் இருப்பதற்காக வேலி போடுகிருேம்.

**கண்ணன் :** முள் செடிகளாலும் மூங்கில் குச்சி

களாலும் வேலி போடுகிருர்களே! எங்கும் முள் நிறைந்து இருந்தால், நாம் நிலத்துக்குள் வருவது எப்படி?

**முருகன் :** வரவும் போகவும் அங்கங்கே படல்கள் வைத்துக் கொள்வார்கள்.

**கண்ணன் :** அப்பா, இன்று நான் வேலியும் வரப்பும் எதற்காக என்பதை அறிந்து கொண்டேன்.

[வேலை முடிந்ததும் முருகனும் அவன் மகன் கண்ணனும் வீட்டுக்குச் சென்ருர்கள்.]

| | | |
|---|---|---|
| வேலி | தேங்கி | செழித்து |
| அழுகி | வரப்பு | நிறைந்து |
| உயர | முருகன் | எதற்காக |
| வயல் | கூடவே | படல்கள் |
| மகன் | கண்ணன் | அங்கங்கே |
| பிள்ளை | விளைந்து | மூங்கிற்குச்சி |

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களை முடி :

கோபுரம் —— உயரம்.
கூரை —— உயரம்.
வரப்பை மேடாக ——.
வயலை ஆழமாக ——.
தண்ணீர் —— பாயாது.
கிணறு —— இருக்கும்.
கோழி —— தூரம் பறக்கும்.
காக்கை —— —— பறக்கும்.

## கேள்விகள்

1. வயலுக்கு வேலி போடுவது ஏன்?
2. வரப்பு உயரமாக இருப்பது எதற்காக?
3. வேலி எப்படி அமைக்கப்படும்?

# 23. நமது உடம்பு



1. நம்முடைய உடம்பின் முக்கிய பாகங்கள் மூன்று. அவை தலை, உடல், கைகால்கள் என்பன.

2. ஒவ்வொருவனும் தன் கையால் அளந்து பார்த்தால், அவனவன் உடம்பு எட்டுச் சாண் இருக்கும். அவற்றுள் தலை ஒரு சாண் அளவுள்ளது. அது மிகவும் கெட்டியான ஒரு எலும்புப் பெட்டி. தலையில் கண், காது, மூக்கு, வாய், மூளை என்னும் முக்கியமான உறுப்புக்கள் இருக்கின்றன. அதனாலேதான் 'எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' எனப்படுகிறது.

3. கண்களால் நாம் எல்லாவற்றையும் பார்க்கிறோம். காதினால் கேட்கிறோம். மூக்கினால் வாசனையை அறிகிறோம். வாயினால் உண்கிறோம்; பேசுகிறோம். மூளை அறிவுக்கு ஆதாரமாக இருக்கிறது. இவைகள் நமக்கு எவ்வளவு முக்கியமானவை பாருங்கள்!

4. உடலும் ஒரு பெட்டியைப் போன்றதுதான். விலையுயர்ந்த ஆபரணங்களை வெளியே வைக்கிறோமா? இல்லையே! பெட்டிக்குள் வைத்துப் பத்திரமாகப் பூட்டு

கிறேம் அல்லவா? அவைகளைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்தவை நம்முடைய சுவாசப்பை, இருதயம், இரைப்பை, ஈரல், குடல் என்பவை. அன்றியும், இவை மிகவும் வியக்கத்தக்க கருவிகள். இவைகள் கெட்டால் பிறகு பழுதுபார்க்க எவராலும் முடியாது. இவ்வளவு சிறந்த கருவிகளைப் பிறர்பார்க்கவும், தொடவும் கூடிய இடத்தில் வைக்கலாமா? வைக்கக்கூடாது அல்லவா? ஆகையால், கடவுள் இந்த விலைமதிக்க முடியாத கருவிகளை நம் உடலாகிய பெட்டிக்குள் அருமையாக அமைத்திருக்கிறுர்.

5. கைகள் வேலை செய்வதற்கும், கால்கள் நடப்பதற்கும் உதவுகின்றன.

6. நம் உடம்பிலுள்ள உறுப்புக்களில் ஒவ்வொன்றும் நமக்கு உபயோகமானதுதான். அவைகளில் எது கெட்டுப்போனுலும், அதனுல் நமக்குத் துன்பமே விளையும். ஆகையால், நம்முடைய உடம்பை நாம் பாதுகாப்பது அவசியம்.

| | | |
|---|---|---|
| தலை | முடியாத | பாகங்கள் |
| ஈரல் | இரைப்பை | பத்திரமாக |
| குடல் | பிரதானம் | பழுதுபார்க்க |
| சாண் | சுவாசப்பை | வியக்கத்தக்க |
| சிரசு | கெட்டியான | ஆபரணங்கள் |
| எலும்பு | முக்கியமான | பாதுகாப்பு |
| துன்பம் | உபயோகம் | ஒவ்வொருவனும் |
| அவசியம் | அருமையாக | அமைத்திருக்கிறுர் |
| இருதயம் | ஆதாரமாக | எல்லாவற்றையும் |

## பயிற்சி

பின்வரும் வார்த்தைகளைக் கீழே உள்ள கோடுகளில் சேர்த்துப் படி :

பிரதானம், உறுதியானது, அருமையாக, உறுப்பு, ஆபரணம், பத்திரமாக.

தாய் குழந்தையை —— வளர்க்கிருள்.

இரும்பு ——.

தோடு ஒரு ——.

வீட்டில் —— இரு.

மூளை ஒரு முக்கிய ——.

உடம்புக்குச் சிரசே ——.

## கேள்விகள்

1. நம் உடம்பிலுள்ள உறுப்புக்களைச் சொல்லு.
2. நம் உடம்பில் கெட்டியான எலும்புப் பெட்டி எது?
3. நம் உடம்பு எத்தனை சாண் உள்ளது? அதில் தலை எத்தனை சாண்?




## 24. சுகம் பேணுதல்

[தகப்பனுருக்கும் மகனுக்கும் சம்பாஷணை]

**தகப்பனுர் :** சாமிநாதா! இன்றைக்குப் பாடசாலைக் குப் போனுயா?

**சாமிநாதன் :** ஆம், போனேன் அப்பா! இப் பொழுதுதான் வந்தேன்.

**தகப்பனுர் :** ஏன் இவ்வளவு நேரம்?

**சாமிநாதன் :** பாடங்கள் முடிந்தவுடன் உபாத்தி யாயர் சில விஷயங்களைப்பற்றிச் சொன்னுர். அதனுல் நேரம் ஆயிற்று.

**தகப்பனுர் :** எதைப்பற்றிச் சொன்னுர்?

சென்னை-600 008. 13966

**சாமிநாதன் :** சுகத்தைப் பேணவேண்டும் என்ருர். அது சம்பந்தமாய் அவர் சொன்னதை நான் நன்ருய்க் கவனிக்கவில்லை. சுகத்தைப் பேணுதல் என்ருல் என்ன ?

**தகப்பஞர் :** மகனே ! முதலில் சுகம் என்ருல் என்ன என்பதை நீ தெரிந்துகொள்ளவேண்டும். நமது தேகத்தில் பல உறுப்புக்கள் இருக்கின்றன. அவை தத்தம் வேலைகளைச் சரியாகச் செய்து வந்தால்தான் உடல் பிணி இல்லாமல் இருக்கும். அவ்வாறு இருப்பதுதான் **சுகம்** எனப்படும்.

**சாமிநாதன் :** சுகமில்லாதவனுக்கு என்ன நேரிடும்?

**தகப்பஞர் :** சுகமில்லாதவன் நன்ருய்ச் சாப்பிட மாட்டான் ; தூங்கமாட்டான் ; படிக்கமாட்டான் ; விளையாடமாட்டான் ; அவனுக்குப் பலம் இருக்காது ; உடம்பின் பாகங்களுக்கு வலி முதலிய துன்பங்கள் ஏற்படும். சுகம் இல்லாதவனுக்கு மிகுந்த செல்வம் இருந்தாலும் பயன்படாது. ஆகையால், சுகத்திற்கு மேலான செல்வம் வேறென்றும் இல்லை.

**சாமிநாதன் :** அப்பா ! அப்படியாஞல் சுகத்தைப் பேணுதல் எப்படி ? சொல்லுங்கள்.

**தகப்பஞர் :** மகனே ! சொல்கிறேன் கேள். நீ சுகத்தைக் காப்பாற்ற வேண்டுமாஞல்,

1. சுத்தமான காற்றைச் சுவாசி.
2. சுத்தமான தண்ணீரைக் குடி.

3. சுத்தமான உணவைச் சாப்பிடு.
4. தினந்தோறும் சுத்தமான நீரில் முழுகு.
5. நாள்தோறும் தேகப்பயிற்சி செய்.

இவைகளைச் செய்து வந்தால், நீ சுகமாய் இருப்பாய்.

**சாமிநாதன் :** அப்பா! இனிமேல் நான் அப்படியே செய்து சுகத்தைப் பேண முயற்சி செய்வேன்.

| | |
|---|---|
| பிணி | பயன்படாது |
| செல்வம் | தேகப்பயிற்சி |
| இன்றைக்கு | கவனிக்கவில்லை |
| சம்பந்தமாய் | சுகத்தைப் பேணுதல் |

### பயிற்சி

கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :

நான் சுத்தமான காற்றைச் ——.
சுத்தமான —— ——.
—— உணவைச் ——.
சுத்தமான நீரில் ——.
நாள்தோறும் —— செய்வேன்.

### கேள்விகள்

1. மேலான செல்வம் எது?
2. சுகம் இல்லாதவன் என்னென்ன செய்ய மாட்டான்?
3. எப்பொழுது நமக்குப் பிணி இல்லாமல் இருக்கும்?



# 25. நல்ல பையன்

1. இவன் ஒரு நல்ல பையன். இவன் பெயர் மாணிக்கம். இவன் நான்காம் வகுப்பில் படிக்கிருன்.

2. மாணிக்கம் நாள்தோறும் அதிகாலேயில் எழுந்திருப்பான். பல் விளக்கி ஸ்நானம் செய்வான்; கடவுளே வணங்குவான்; பாடங்களே ஒழுங்காகப் படிப்பான்.

3. வீட்டில் உள்ள உணவை உண்பான்; அழுக்கில்லாத துணிகளே உடுத்துக்கொள்வான்; நேராகப் பாடசாலேக்குப் போவான். வழியில் கெட்ட பிள்ளேகளோடு சேரமாட்டான். குறித்த காலம் தவருமல் பள்ளிக்கூடத்திற்குச் செல்வான்.

4. பாடசாலையில் தன் பாடங்களை நன்ருக ஒப்புவிப்பான். உபாத்தியாயர் சொல்வதைக் கருத்தாய்க் கேட்பான். அவர் சொற்படி நடப்பான்.

5. படிக்கவேண்டிய காலத்தில் படிப்பான். விளையாடவேண்டிய காலத்தில் விளையாடுவான். புத்தகங்களைச் சரிவர வைத்துக்கொள்வான்.

6. கெட்ட வார்த்தைகள் அவன் வாயில் வாரா. எப்பொழுதும் உண்மையே பேசுவான்.

7. மாலையில் பாடசாலை விட்டவுடன் நேராக வீட்டுக்குப்போய் கை கால்களைக் கழுவிக்கொள்வான். சிறிது நேரம் இளைப்பாறியபின் தன் நண்பர்களோடு விளையாடுவான்.

8. விளக்கேற்றினவுடன் தன் பாடங்களைப் படிப்பான். பிறகு தனக்குக் கிடைத்த உணவை உண்டு, கொஞ்ச நேரம் கழித்துப் படுக்கைக்குப் போவான். படுத்துக்கொள்ளுமுன் கடவுளைத் தொழுவான்.

9. தாய் தந்தைக்கு அடங்கி நடப்பான். எல்லோரையும் நேசிப்பான். எந்தப் பிராணிக்கும் துன்பம் செய்யமாட்டான். இவன் அல்லவா நல்ல பிள்ளை! இவனைப் போலவே நீங்களும் இருக்க முயலுங்கள்.

| | | |
|---|---|---|
| கடவுள் | ஒழுங்காக | தொழுவான் |
| அழுக்கு | மாணிக்கம் | ஒப்புவிப்பான் |
| ஸ்நானம் | கருத்தாய் | நாள்தோறும் |
| வகுப்பில் | நண்பர்கள் | நேரங்கழித்து |
| அதிகாலை | நேசிப்பான் | இளைப்பாறியபின் |

### பயிற்சி

சரியாகச் சேர்த்துப் படி :

| | |
|---|---|
| உபாத்தியாயர் சொல்வதைக் | கடவுளை வணங்கு. |
| உபாத்தியாயர் சொற்படி | சேராதே. |
| பாடங்களை நன்ருக | எழுந்திரு. |
| கெட்ட பிள்ளைகளோடு | ஒப்புவி. |
| அதிகாலையில் | கேள். |
| காலை மாலை | நட. |

### கேள்விகள்

1. மாணிக்கம் என்னென்ன செய்வான் ?
2. மாணிக்கம் என்னென்ன செய்யமாட்டான் ?



## 26. மகாத்மா காந்தி

**1.** உலகத்திலுள்ள சிறந்த உத்தமர்களில் **மகாத்மா காந்தி** ஒருவர். பம்பாய் மாகாணத்தில் **போர் பந்தர்** என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அங்கு இவர் சுமார் எண்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு பிறந்தார். இவருடையதந்தை பெரிய பணக்காரரர். அவர் மந்திரியாக இருந்தவர்.

**2.** காந்தி பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்க சீமைக்குப் போனார். அப்போது அவருக்கு, 'மாமிசம் புசிக்காதே, கள் குடிக்காதே' என்று அவருடைய தாயார் கட்டளையிட்டார். தாய் சொல்லை அவர் தட்டி நடக்கவில்லை. தாயினும் சிறந்த கோயிலுமுண்டோ?

3. காந்தி பாரிஸ்டர் பட்டம் பெற்றதும், தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கு பாரிஸ்டர் தொழிலில் ஆயிரம் ஆயிரமாகப் பணம் சம்பாதித்து வாழ்ந்தார். நமது தேசத்தில் பிழைப்பு இல்லாமல் இங்கிருந்து அநேகர் தென் ஆப்பிரிக்காவுக்குப் போயிருந்தார்கள். அங்கே அவர்கள் அதிகக் கஷ்டம் அடைந்தார்கள். காந்தி அதை அறிந்தார் ; அவர்களுடைய துன்பங்களைப் போக்கப் பாடுபட்டார் ; அங்குள்ளவர்களின் கஷ்டம் தீர்ந்ததும் இந்தியாவுக்கு வந்தார் ; பாரிஸ்டர் பதவியைத் துறந்தார் ; இரவும் பகலும் ஏழைகளுக்கு உழைக்க முற்பட்டார்.

4. பம்பாயில் ஏழைத் தொழிலாளர் அதிகம். அவர்களுடைய கஷ்டத்தைக் கண்டு காந்தி கலங்கினார் ; மூன்று நாட்கள் பட்டினி கிடந்தார் ; ஏழை மக்களின் துன்பத்தைப் போக்கினார். பின்பு ஏழைக் குடியானவர்களுக்கு ஊழியம் செய்தார். அதில் கஷ்டமும், நஷ்டமும் வந்தன. அவற்றை அவர் கவனிக்கவில்லை. தாம் துன்பம் அடையினும், பிறர் சுகப்பட்டால் போதும் என்பதே அவர் கருத்து.

5. கோபம் என்பதே அவரிடம் கிடையாது. பகைவரிடம் அவர் அன்பு காட்டுவார் ; யாரையும் நோகச் செய்யார் ; அன்பினால் அனைவரையும் வசம் செய்வார் ; தீமை செய்தவனுக்கு நன்மையே செய்வார். இது கண்டு உலகத்தார் அனைவரும் அவரை 'மகாத்மா' என்று போற்றுகின்றனர்.

6. நம் தேசத்திலே பலருக்குக் கட்டத் துணி இல்லை. அது கண்டு இவர் மனம் இளகினர் ; சட்டையும் குட்டையும் வேண்டாம் என்று வெறுத்தார்; சிறிய கதர் ஆடையையே கட்டிக் கொண்டிருந்தார். ஏழைகளுக்கு நன்மை உண்டாக இராட்டையில் இவர் நூல் நூற்ருர் ; எல்லோரையும் நூற்கச் சொன்னர்.

7. மகாத்மா காந்தி எங்கேனும் போனல், தேர் திருநாள் போல ஜனங்கள் கூடுவர் ; அவரைக் கண்டு கொண்டாடுவார்கள். அவர் மரணமடைந்த பொழுது நம் நாட்டு மக்கள் எல்லோரும் மிகவும் வருந்தினர்கள். அவரைப்போல நீங்களும் நல்லவராய் நடக்கவேண்டும் ; யாருக்கும் உதவிபுரிய வேண்டும்.

| | | |
|---|---|---|
| பதவி | கலங்கினர் | போர்பந்தர் |
| மந்திரி | பாரிஸ்டர் | பணக்காரர் |
| கஷ்டம் | முற்பட்டார் | பாடுபட்டார் |
| பகைவர் | தீர்ந்ததும் | சிறந்த உத்தமர் |
| ஊழியம் | வாழ்ந்தார் | கட்டளையிட்டார் |
| போக்க | துறந்தார் | போற்றுகின்றனர் |

### பயிற்சி

மகாத்மா காந்தியின் உத்தம குணங்களைப்பற்றிச் சில வாக்கியங்கள் கூறு.

### கேள்விகள்

1. காந்தி பிறந்து வளர்ந்த இடம் எது ?
2. அவர் தென் ஆப்பிரிக்காவில் என்ன செய்தார் ?
3. தொழிலாளருக்காக காந்தி செய்தது என்ன ?



# 27. போலீஸ் சேவகன்

மதுரையை அடுத்த ஒரு கிராமத்தில் முருகன் என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். மதுரையிலே ஒவ்வொரு மாதமும் திருவிழா நடக்கும் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். சித்திரைத் திருவிழாவைப் பார்க்க விரும்பி, அவன் மதுரைக்கு வந்தான். வழியில் பல இடங்களில் போலீஸ் சேவகர்கள் நிற்பதைப் பார்த்தான். அவன் 'இவர்கள் ஏன் இப்படி நிற்கிறுர்கள் ?' என்று அறிய விரும்பினுன். அவன் ஒரு போலீஸ் சேவகனிடம் சென்று அவனுேடு பேசத் தொடங்கினுன்.

**முருகன் :** ஐயா, நீங்கள் ஏன் இங்கே நிற்கிறீர்கள் ?

**போலீஸ் சேவகன் :** தம்பீ, சித்திரைத் திருவிழா என்பது உனக்குத் தெரியாதா ? நீ திருவிழாப்

பார்க்கத்தானே வந்தாய்? இங்கே இன்னும் எத்தனை பேர்கள் வருகிறார்கள் பார்.

**முருகன் :** எங்களைப் போலவே நீங்களும் திரு விழாப் பார்க்கத்தான் வந்தீர்களோ? ஆனால் இங்கே ஏன் நிற்கிறீர்கள்?

**போலீஸ் சேவகன் :** இந்த ஜனக் கூட்டத்தில் நல்லவர்களும் இருப்பார்கள்; திருடர்களும் இருப்பார் கள். திருடர்கள் மற்றவர் பொருளைத் திருடாமல் பார்த்துக்கொள்வது எங்கள் வேலை. சில சிறுவர்கள் கூட்டத்திலே வழிதப்பித் தவிப்பார்கள். பெற்றோர்கள் அவர்களைத் தேடி அலைவார்கள். நாங்கள் அச்சிறு வர்களைப் பெற்றோர்களிடம் சேர்ப்போம். சில துஷ் டர்கள் கூட்டத்தில் கலகம் செய்வார்கள். அவர்களை அடக்குவதும் எங்கள் வேலையே.

**முருகன் :** நீங்கள் இதுவரையில் எந்தத் திருடனையாவது பிடித்தீர்களா?

**போலீஸ் சேவகன் :** சிறிது நேரத்துக்குமுன் ஒருவன் ஒரு குழந்தையின் கழுத்தில் இருந்த சங்கிலியைத் திருடினான். உடனே அவனைப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பினேன்.

**முருகன் :** போலீஸ் ஸ்டேஷனில் இருப்ப வர்கள் அவனை என்ன செய்வார்கள்?

**போலீஸ் சேவகன் :** அவர்கள் அவனைத் தீர விசாரிப்பார்கள்; அவன் குற்றவாளி என்று ஏற்பட்டால் அவனைத் தண்டிப்பார்கள்.




# 27. போலீஸ் சேவகன்

மதுரையை அடுத்த ஒரு கிராமத்தில் முருகன் என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். மதுரையிலே ஒவ்வொரு மாதமும் திருவிழா நடக்கும் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான். சித்திரைத் திருவிழாவைப் பார்க்க விரும்பி, அவன் மதுரைக்கு வந்தான். வழியில் பல இடங்களில் போலீஸ் சேவகர்கள் நிற்பதைப் பார்த்தான். அவன் 'இவர்கள் ஏன் இப்படி நிற்கி ருர்கள் ?' என்று அறிய விரும்பினுன். அவன் ஒரு போலீஸ் சேவகனிடம் சென்று அவனேடு பேசத் தொடங்கினுன்.

**முருகன் :** ஐயா, நீங்கள் ஏன் இங்கே நிற்கிறீர் கள் ?

**போலீஸ் சேவகன் :** தம்பி, சித்திரைத் திரு விழா என்பது உனக்குத் தெரியாதா ? நீ திருவிழாப்

பார்க்கத்தானே வந்தாய்? இங்கே இன்னும் எத்தனை பேர்கள் வருகிறார்கள் பார்.

**முருகன் :** எங்களைப் போலவே நீங்களும் திரு விழாப் பார்க்கத்தான் வந்தீர்களோ? ஆனால் இங்கே ஏன் நிற்கிறீர்கள் ?

**போலீஸ் சேவகன் :** இந்த ஜனக் கூட்டத்தில் நல்லவர்களும் இருப்பார்கள்; திருடர்களும் இருப்பார் கள். திருடர்கள் மற்றவர் பொருளைத் திருடாமல் பார்த்துக்கொள்வது எங்கள் வேலை. சில சிறுவர்கள் கூட்டத்திலே வழிதப்பித் தவிப்பார்கள். பெற்றோர்கள் அவர்களைத் தேடி அலைவார்கள். நாங்கள் அச்சிறு வர்களைப் பெற்றோர்களிடம் சேர்ப்போம். சில துஷ் டர்கள் கூட்டத்தில் கலகம் செய்வார்கள். அவர்களை அடக்குவதும் எங்கள் வேலையே.

**முருகன் :** நீங்கள் இதுவரையில் எந்தத் திருடனையாவது பிடித்தீர்களா?

**போலீஸ் சேவகன் :** சிறிது நேரத்துக்குமுன் ஒருவன் ஒரு குழந்தையின் கழுத்தில் இருந்த சங்கிலியைத் திருடினான். உடனே அவனைப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பினேன்.

**முருகன் :** போலீஸ் ஸ்டேஷனில் இருப்ப வர்கள் அவனை என்ன செய்வார்கள் ?

**போலீஸ் சேவகன் :** அவர்கள் அவனைத் தீர விசாரிப்பார்கள் ; அவன் குற்றவாளி என்று ஏற்பட்டால் அவனைத் தண்டிப்பார்கள்.

**முருகன் :** அவன் திருடிய நகையை அவர்கள் என்ன செய்வார்கள் ?

**போலீஸ் சேவகன் :** அதை அந்தக் குழந்தை யின் தகப்பனுரிடம் கொடுப்பார்கள். தம்பீ, எனக்கு உன்னேடு பேசிக்கொண்டிருக்க நேரமில்லே.

முருகன் போலீஸ் சேவகனுக்கு வந்தனம் கூறி விட்டுத் தன் வழியே வீட்டிற்குச் சென்ருன்.

| | | |
|---|---|---|
| கலகம் | குற்றவாளி | விசாரிப்பார்கள் |
| திருவிழா | அடக்குவது | தண்டிப்பார்கள் |
| வந்தனம் | சேர்ப்போம் | தவிப்பார்கள் |

### பயிற்சி

1. படத்தைப் பார்த்துப் பின்வரும் வாக்கியங்களே முடி :
   தேர் ஓடுகிறது.
   பல போலீஸ்காரர்கள் —— —— .
   ஒரு பையன் ஒரு —— பேசுகிருன்.
2. விடை எழுது :
   தண்டிக்கப்படுவான், யார் ? —— .
   திருடர்களேப் பிடிப்பவன், யார் ? —— .
   ஜனங்கள் கூட்டமாக வருவார்கள், எதற்கு?——.

### கேள்விகள்

1. முருகன் ஏன் மதுரைக்கு வந்தான் ?
2. போலீஸ் சேவகனுடைய வேலேகள் என்ன ?
3. திருவிழாவிலே அச்சேவகன் என்ன செய்தான் ?
4. முருகன் என்ன தெரிந்துகொண்டான் ?

# 28. வீரத்தாய்

(ஒரு நாடகம்)

## காட்சி 1

**இடம் :** வீரத்தாயின் மாளிகை.

**காலம் :** காலை.

**பாத்திரங்கள் :** வீரத்தாய், அவள் மகன் வீரண்ணன்.

[தெருவில் தமுக்குச் சத்தம் கேட்கிறது. எல்லோரும் உற்றுக் கேட்கின்றனர்.]

**தாய் :** குழந்தாய்! வீரண்ணு! கேட்டாயா தமுக்கடிப்பவன் சொன்னதை?

**வீரண்ணன் :** ஆம் அம்மா, யுத்தம்! யுத்தம்! பகையரசரின் படைகள் நம் நகரின் கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருக்கின்றன. "குடிகள் வீட்டிற்கு ஒருவராக உடனே போருக்குச் சித்தமாகுக! பகைவரை எதிர்த்து நின்று அவர்களைப் புறங்காண வேண்டும்" என்று நம் அரசர் கட்டளை பிறப்பித்திருக்கின்றார்.

**தாய் :** வீரண்ணு, உன் தந்தை போரில் புலியாயிருந்தார். பகைவர்களுக்கு அவர் எமன் போலாவார். போர் என்பது அவருக்கு ஒரு விளையாட்டு.

**வீரண்ணன் :** அம்மா, நான் மட்டும் எதிரிகளைச் சும்மா விடுவேனா! இதோ, போருக்குத் தயாராகிவிட்டேன்; கறுக்கொண்டு போர் செய்து எதிரிகளைச் சின்னாபின்ன மாக்குவேன்.

## காட்சி 2

[யுத்த பேரிகையின் சத்தம் கேட்கிறது.]

**வீரண்ணன் :** அம்மா, போர் முரசு ஒலிக் கின்றது. வீரர்கள் அணி அணியாகச் செல்லு கிருர்கள். தங்களுடைய ஆசியை நாடி நிற்கிறேன்.

**தாய் :** மகனே, விரைவில் பகைவரை வென்று வெற்றியுடன் வா. ஆனுல் உயிர் போயினும் எதிரி களுக்குப் புறமுதுகிடாதே.

## காட்சி 3

[வீரண்ணன் பல வீரர்களைப் போரில் வீழ்த்தினுன். தானும் வீழ்ந்தான். வீரன் ஒருவன் வீரத்தாயிடம் ஓடி வருகிருன்.]

**வீரன் :** அம்மா, வந்தனம். தங்கள் மகன் போரில் புறங்காட்டி ஓடிவிட்டான்.

**தாய் :** ஆ! என்ன ? என் மகனு ! புறங்காட்டி ஓடினுனு ? பகைவருக்குப் புறங்காட்டவா நான் அவ னைப் பால் கொடுத்து வளர்த்தேன். இதோ யுத்த களத்திற்குப் போய்ப் பார்க்கிறேன். அவன் புறமுது கிட்டு ஓடியது உண்மையானுல், நான் என் வாளுக்கு இரையாவேன்.

[யுத்த களத்திற்குச் சென்று பார்க்கிருள்.]

**தாய் :** ஆ! நீ புறமுதுகிட்டு ஓடிவிட்டாய் என்று சொன்னுர்களே! இதோ உன் முகத்திலும், மார்பி லும் விழுப்புண்கள் பட்டிருக்கின்றனவே! முதுகில்

காயங்கள் இல்லையே ! அந்தோ ! நீ மாண்டுவிட்டாய் ! ஆயினும் உன் வீரமும், குடிச் சிறப்பும் பழுதுபட வில்லை. என் கண்ணே ! வீரண்ணனே ! நீ பிறந்த போது அடைந்ததைக் காட்டிலும் இப்போதுதான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன்.

| | | |
|---|---|---|
| ஒலி | சிறப்பு | புறங்காண |
| ஆசி | தமுக்கு | காயங்கள் |
| அணி | சத்தம் | இப்போது |
| எமன் | தாயார் | பிறப்பித்து |
| வீரன் | முதுகில் | விழுப்புண்கள் |
| முரசு | அந்தோ | புறமுதுகிட்டு |
| போர் | வந்தனம் | பிறந்தபோது |
| பேரிகை | படைகள் | பழுதுபடவில்லை |
| யுத்தம் | முற்றுகை | குடிச் சிறப்பு |

# 29. ஏர்

## (பாட்டு)

1. ஏற்றபடி ஏர் பிடித்து
நிலமுழுவோம் வாரும்,
பாட்டுப்பாடிப் பலவகையாய்ப்
பயிரிடுவோம் வாரும்.

2. நாட்டினிலே வறுமையில்லை
நாட்டிடுவோம் ஏரே,
வீட்டினிலே வேண்டிமட்டும்
கூட்டிடுவோம் நெல்லே.

3. ஏர் பிடித்தே உழுதவர்கள்
என்றுமுயிர் காப்பார்,
ஊரிலவர் பெரியவர்கள்
உரிமையுடன் வாழ்வார்.

4. பாடுபட்டு உழுதவர்கள்
பாக்கியமாய் வாழ்வார்,
நாடுகொண்ட பசிப்பிணியை
நலமுடனே தீர்ப்பார்.

5. கைகட்டிச் சேவகந்தான்
கனவிலுமே செய்யோம்,
ஏரோட்டிச் சுதந்திரமாய்
என்றுமிங்கே வாழ்வோம்.

| | | |
|---|---|---|
| என்றும் | கனவிலும் | உயிர்காப்பார் |
| கைகட்டி | சுதந்திரமாய் | வறுமையில்லை |
| சேவகம் | உரிமையுடன் | கூட்டிடுவோம் |




# 30. நரியும் காக்கையும்

## (பாட்டு)

1. பசியால் வாடிய நரியொன்று
பகலில் வனமெல் லாம்ஓடி
2. இரைஎங் ககப்படும் எனத்தேடி
இங்கும் அங்கும் திரிந்ததுவே.
3. திரிந்தும் அதற்கோர் ஆகாரம்
சிறிதும் கிடைக்காததைக்கண்டு
4. திரும்பி வரும்போ தொருமரத்தில்
திருட்டுக் காக்கை வடையொன்றை
5. வாயில் கௌவித் தலையசைத்து
வளமாய் இருக்க நரிகண்டு,

6. ‘ நானிவ் வடையை அபகரித்தால்
நலமாய் உணலாம் !’ என எண்ணிப்
7. பாங்காய் மரத்தின் கீழே போய்ப்
பரிவுடன் காக்கைக் கிதுசொல்லும் :
8. “ உன்னைப்போலும் அழகுள்ளோர்
உலகில் யாரும் இலர்கண்டாய் !
9. அழகுக் கொப்பக் குரலமைந்தால்
அரிதே உனைப்போல் சிறப்புடையோர்.”
10. எனவே காகம் வாய்திறந்து
இங்கித மாகப் பாடிடவே,
11. உடனே விழுந்தது வடைகீழே ;
ஓடிற் றேநரி அதைக்கொண்டே.
12. இவ்வித மாக மடக்காகம்
ஏமாந் ததுவே மோசமதாய் ;
13. இச்சகம் பேசும் மாந்தர்தமை
இயல்பாய் அகற்றுதல் நெறியாகும்.

| | | |
|---|---|---|
| ஒப்ப | இச்சகம் | மடக்காகம் |
| வனம் | பாங்காய் | இங்கிதமாக |
| வளமாய் | பரிவுடன் | அபகரித்தல் |

### பயிற்சி

நரியும், காக்கையும் என்ற கதையைச் சுருக்கமாகச் சொல்லு.

### கேள்விகள்

1. நரி காக்கையை எப்படி ஏமாற்றியது ?
2. இக்கதையால் விளங்கும் நீதி என்ன ?



## 31. நரியும் திராட்சைப்பழமும்

1. ஒரு நாள் ஒரு நரி இரைதேடிப் பல இடங்களிலும் அலைந்து திரிந்தது. ஓரிடத்திலும் இரை அகப்படாமல், அது விசனத்தோடு திரும்பியது.

2. வரும் வழியில் ஒரு பெரிய திராட்சைத் தோட்டத்தைக் கண்டது. அதில் பழக்குலைகள் வரிசை வரிசையாகத் தொங்கிக் கொண்டு இருந்தன. அவைகளைப் பார்த்தவுடனே அதற்கு நாவில் நீர் ஊறிற்று. அது அவற்றைத் தின்பதற்கு ஆசை கொண்டது.

3. உடனே அது தோட்டத்திற்குள் நுழைந்து பழங்களைப் பறிக்க முயன்றது. அவை மிக்க உயரத்தில் இருந்தபடியால், ஒரு குலையாவது அதற்கு எட்டவில்லை.

4. ஆனாலும் பழத்தை விட்டுப்போக நரிக்கு மனம் வரவில்லை. ஆதலால் 'இன்னொரு முறை முயல்வோம்,' என்று அது நினைத்தது. தன்னால் ஆனமட்டும் குதித்துக் குதித்துப் பார்த்தது. குதித்து என்ன பயன்? அதற்குக் கால்கள் நொந்தனவே அல்லாமல் பழம் கிட்டவில்லை.

5. உடனே அது "சீ! சீ! இவை புளிக்கும். இவை எனக்கு வேண்டாம்; வேண்டுமானால் நான் பறித்துக்கொள்ள மாட்டேனா?" என்று கூறிற்று.

6. சிலர் தமக்கு ஒரு பொருள் கிட்டாவிட்டால், இந்த நரியைப்போல அதை இகழ்ந்து பேசுவார்கள். அப்படிப் பேசுவது தகாது. நாம் விரும்புகிற பொருள் எல்லாம் நமக்குக் கிடைக்குமா?

7. ஆகையால், நாம் கருதிய பொருள் கிட்டாவிட்டால், நாம் அதை உடனே மறந்துவிடவேண்டும். அதை இழிவாகப் பேசுவதில் சிறிதும் பயன் இல்லை. '**கிட்டாதாயின் வெட்டென மற**' என்பது பழமொழி.

| | | |
|---|---|---|
| பழக்குலை | வெட்டென | இன்னொரு முறை |
| முயன்றது | கிட்டாவிட்டால் | அலைந்து திரிந்து |
| நொந்தன | இகழ்ந்து | குதித்துக் குதித்து |

### பயிற்சி

வரிசை வரிசையாக, நீர் ஊறும், அலைந்து திரிந்து,— இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துக் கூறு.

### கேள்விகள்

1. நரியின் நாவில் ஏன் நீர் ஊறிற்று?
2. பழங்களைப் பறிக்க நரி என்ன செய்தது?
3. கடைசியில் அது என்ன சொல்லிக் கொண்டு போயிற்று?
4. இக்கதையால் விளங்கும் நீதி என்ன?

# 32. உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
4. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
6. நஞ்சுடனே ஒரு நாளும் பழக வேண்டாம்.
7. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.
8. அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்.
9. தனந்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டாம்.
10. தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
11. குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.
12. கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்.
13. கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்.
14. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.
15. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க [வேண்டாம்.
16. முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்.
17. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
18. எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்.
19. செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
20. தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

## 33. செல்லக் கிளியே

அன்பை வளர்க்க வேண்டும் செல்லக் கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும் செல்லக் கிளியே
அன்னை சொற் கேட்க வேண்டும் செல்லக் கிளியே
அப்பாவைப் பணிய வேண்டும் செல்லக் கிளியே
உன்னைப் பெற்று வளர்த்தார் செல்லக் கிளியே
உயிர்போல் உன்னை நேசித்தார் செல்லக் கிளியே
பெற்றவர் மனங்குளிரச் செல்லக் கிளியே
பேரறிஞன் ஆகவேண்டும் செல்லக் கிளியே
உற்றவர் மனங்குளிரச் செல்லக் கிளியே
உதவி புரியவேண்டும் செல்லக் கிளியே
கற்றபுல வர்க்கடங்கி செல்லக் கிளியே
கல்விமிகக் கற்கவேண்டும் செல்லக் கிளியே
நற்றவப் பெரியோரை செல்லக் கிளியே
நாடி வணங்க வேண்டும் செல்லக் கிளியே
ஏழைக் கிரங்க வேண்டும் செல்லக் கிளியே
இட்டுணவு கொள்ள வேண்டும் செல்லக் கிளியே
தோழமை கொள்ள வேண்டும் செல்லக் கிளியே

தூய நல்ல நேயரையே செல்லக் கிளியே
தீரரின் வாழ்வை நினை செல்லக் கிளியே
தினமும் பெருமை பெறு செல்லக் கிளியே
வீரம் பெருகி வளர செல்லக் கிளியே
வெற்றியருளுந் தெய்வம் செல்லக் கிளியே

—சுவாமி சுத்தானந்த பாரதியார்

| | | |
|---|---|---|
| தூய | தோழமை | மனங்குளிர |
| கற்ற | உற்றவர் | கற்கவேண்டும் |
| தீரரின் | பெற்றவர் | நற்றவப் பெரியார் |
| நேயரை | நேசித்தார் | பணியவேண்டும் |

139662
081,6 N54

RTR/53